# சேலம் இளைஞர் அணி மாநாடு: 2 சக்கர வாகன விழிப்புணர்வுப் பேரணி!

## பங்கேற்றவர்களுக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சான்றிதழ் - சமூக வலைதளத்தில் பாராட்டு!

சேலம் இளைஞர் அணி மாநாடு தொடர்பாக இரு சக்கர வாகனப் பேரணி தமிழ்நாடு முழுவதும் குமரியில் உள்ள வள்ளுவர் சிலையில் தொடங்கி சேலம் மாநாட்டுத் திடலில் முதல்வர் - தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் - பயணித்து நிறைவு செய்தனர். இப்பேரணியில் பங்கேற்ற இளைஞர் அணியினருக்கு அமைச்சரும் கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பாராட்டிதழும் வழங்கினார்.

இந்நிகழ்வையடுத்து, தமது 'எக்ஸ்' வலைதளப் பக்கத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்,

"மாநில உரிமை மீட்பு முழக்கமாக சேலத்தில் நடைபெற்ற நம் 'தி.மு.க. இளைஞர் அணி'யின் 2ஆவது மாநில மாநாட்டின் வெற்றி ஒட்டுமொத்த இந்திய ஒன்றியத்தையும் திரும்பிப் பார்க்க வைத்தது.

கழக இளைஞரணி மாநில மாநாட்டின் நோக்கத்தையும் அது தொடர்பான விழிப்புணர்வையும் தமிழ்நாடெங்கும் கொண்டு சேர்க்கும் விதமாக, 'DMKRiders'ன் மாபெரும் இருசக்கர வாகனப் பேரணியை குமரியில் உள்ள வள்ளுவர் சிலை அருகே நவம்பர் மாதம் தொடங்கி வைத்தோம்.

வள்ளுவர் பெரியார் அண்ணா கலைஞர் மண்டலங்கள் என தமிழ்நாடெங்கும் பயணித்து இளைஞரணி மாநாடு குறித்த விழிப்புணர்வை 'DMKRiders' பட்டிதொட்டியெங்கும் கொண்டு சேர்த்தனர்.

குறிப்பாக, மாநாட்டுத் திடலில் நமது கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் முன்பாக அணிவகுப்பு நடத்தி இரு சக்கர வாகனப் பேரணியை நிறைவு செய்தனர்.

கழக இளைஞரணி மாநாட்டின் வெற்றிக்கு முக்கியப் பங்காற்றிய 'DMKRiders' மற்றும் இப்பேரணியின் ஒருங்கிணைப்பாளர்களை நேரில் வாழ்த்தி குழுப்புகைப்படங்கள் எடுத்துக் கொண்டோம். அவர்களின் கழகப்பணியைப் பாராட்டி சான்றிதழ்களை வழங்கி வாழ்த்தினோம்."

-என்றுபதிவிட்டதுகுறிப்பிடத்தக்கதாகும்.



இருசக்கர வாகண பேரணி ஒருங்கிணைப்பாளர் அ.ராஜா தமிழ் மாறன் , வள்ளுவர் மண்டல ஒருங்கிணைப்பாளர்கள் R.K.K கார்த்தி, பா.பிரபின் , N பால்துறை மற்றும் DMK Riders. அனைவருக்கும் கழக இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பாராட்டி, சான்றிதழ் வழங்கினார்.



இருசக்கர வாகண பேரணி ஒருங்கிணைப்பாளர் அ.ராஜா தமிழ் மாறன் , பெரியார் மண்டல ஒருங்கிணைப்பாளர்கள் சன் சுரேஸ், SS செல்வராஜ், V.டேவிட் ராஜா மற்றும் DMK Riders. அனைவருக்கும் கழக இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பாராட்டி, சான்றிதழ் வழங்கினார்.



இருசக்கர வாகண பேரணி ஒருங்கிணைப்பாளர் அ.ராஜா தமிழ் மாறன் , அண்ணா மண்டல ஒருங்கிணைப்பாளர்கள் K.குட்டி, TR ரவிந்திரகுமார், M .உத்தமன் மற்றும் DMK Riders. அனைவருக்கும் கழக இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பாராட்டி, சான்றிதழ் வழங்கினார்.



இருசக்கர வாகண பேரணி ஒருங்கிணைப்பாளர் அ.ராஜா தமிழ் மாறன் , கலைஞர் மண்டல ஒருங்கிணைப்பாளர்கள் பர்மா M ரூபன், G முத்துக்குமார், E S உதயநிதி மற்றும் DMK Riders. அனைவருக்கும் கழக இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பாராட்டி, சான்றிதழ் வழங்கினார்.


கோவையில் நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சியாகத் திகழ்ந்த மறைந்த முரசொலி மாறன் அவர்களின் மைத்துனர் கே.சந்தானம் அவர்களுடைய பேத்தியும், கோவை எஸ்.சீனிவாசன் திருமதி.எஸ்.தீபா அவர்களுடைய மகளுமான மருத்துவர் அஷ்வினி சீனிவாசன் கோவை ஏ.கணேஷ்குமார் திருமதி.எஸ்.வித்யா ஆகியோரின் மகன் ஆடிட்டர் அனுஷ் பரத்வாஜின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் இளைஞரணி செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று வாழ்த்தினார்.

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைக்கிறார்! விசாலாட்சி எம்.சி. தலைமையில்

## வேளச்சேரி கிழக்கு பகுதியில் புதிய நியாய விலை கடை!

### அசன் மௌலானா எம்.எல்.ஏ. - இரா. துரைராஜ் முன்னிலை! துரைகபிலன் அறிக்கை!

*சென்னை, பிப். 11 -*

*கழக தலைவர் - திராவிட மாடல் நாயகர் நல்லாட்சியில் சென்னை தெற்கு மாவட்டம் வேளச்சேரி கிழக்கு பகுதி 180 வது வார்டு திருவான்மியூர் திருவள்ளுவர் நகர் 7 வது பிரதான சாலையில் குடும்ப அட்டை பயனாளர்கள் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் இயங்கும் நியாய விலை கடையை மாமன்ற உறுப்பினர் விசாலாட்சி கபிலன் வார்டு மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட நியாய விலை கடையை இன்று (11.2. 2024) காலை 9 மணியளவில் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணி யன் திறந்து வைக்கிறார்.*

*இதில் சட்ட மன்ற உறுப்பினர் அசன்மௌலானா , 13 - வது மண்டலக் குழுத் தலைவர் இரா.துரைராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*இதில் வேளச்சேரி கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள், பொது குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு பகுதி கழக செயலாளர் துரை கபிலன் கேட்டுக் கொண்டுள்ளார்.*


நீலகிரி மாவட்டம், உதகை தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில், கட்டிட அனுமதி வழங்குவது தொடர்பான நடைமுறைகள் குறித்து, அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில், அமைச்சர் கா.ராமச்சந்திரன் மற்றும் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. இராசா ஆகியோர் முன்னிலையில், சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். இதில் நகர் ஊரமைப்பு இயக்குநர் கணேசன் , மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக் , , மாவட்ட வன அலுவலர்கள் கௌதம் (உதகை), .கொம்மு ஓம்காரம் , (கூடலூர்), நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் (திருப்பூர்) இளங்கோவன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

### மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம்

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆற்றிய கழகப்பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாவட்ட வாரியாக, எனது தலைமையில், மாநிலத் துணைச் செயலாளர்கள் முன்னிலையில் குறிஞ்சி இல்லத்தில் வருகிற 14 மற்றும் 15–ஆம் தேதிகளில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தாங்கள் பராமரித்து வரும் மினிட் புத்தகம், கழகப் பணிகள் குறித்த பத்திரிகைச் செய்திகள், புகைப்படங்கள் ஆகியவற்றுடன் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

ஆய்வுக் கூட்ட விவரம் வருமாறு :

| நாள் | மண்டலம் | நேரம் |
|---|---|---|
| 14.02.2024 புதன்கிழமை | 1 | மாலை 4.00 – 6.00 மணி |
| | 2 | மாலை 6.00 – 8.00 மணி |
| 15.02.2024 வியாழக்கிழமை | 3 | மாலை 4.00 – 6.00 மணி |
| | 4 | மாலை 6.00 – 8.00 மணி |

**அன்பகம்**
சென்னை – 18.
நாள் : 10–02–2024.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


கோவூர் அருள்மிகு.சுந்தரேஸ்வரர் திருக்கோயில் புதிய திருத்தேர் திருப்பணியினை குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அருகில் மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் படப்பை ஆ.மனோகரன், ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஊராட்சி மன்ற தலைவர் ப.சுதாகர், ஒன்றிக்குழு உறுப்பினர் க.அன்பழகன் மற்றும் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்டோர் உள்ளனர்.